விடியல் பேருந்து திட்டம்; புதுமைப் பெண் திட்டம் என எண்ணற்ற திட்டங்கள்

மகளிர் முன்னேற்றத்தில் ஸ்டாலின் தனிக் கவனம்

தமிழக அரசு அறிக்கை

சென்னை, மே 24–

மகளிர், குழந்தைகள் நலனுக்காக முதலமைச்சர் ஸ்டாலின் கொண்டு வந்த பல்வேறு திட்டங்களால் அனைவரும் பாதுகாப்புடன் வாழ்கிறார்கள், முதலமைச்சரை மனதார பாராட்டுகிறார்கள் என்று அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் பெருமிதத்துடன் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து அரசு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டில் வாழும் மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர், குழந்தைகள் ஆகியோரின் பாதுகாப்பிலும் வளர்ச்சியிலும் தனிக் கவனம் செலுத்தி சமூகநலத் துறையில் பல சிறப்புத் திட்டங்களை முனைப்போடு செயல்படுத்தி வருகிறார்.

கொரோனா நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டு பெற்றோர் இருவரையும் இழந்த, தாய் அல்லது தந்தையை இழந்த 382 குழந்தைகளின் பெயரில் தலா ரூ.5 லட்சம் வீதம் ரூ.19.10 கோடி; வங்கிகளில் வைப்பீடு செய்து குழந்தைகள் 18 வயதை நிறைவு செய்யும்போது அவர்களுக்கு வட்டியுடன் வழங்கும் திட்டத்தை உருவாக்கியதால் தாயுமானவராக போற்றப்படுகிறார்.

மேலும், கொரோனா நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டு தாய் அல்லது தந்தையை இழந்த 18 வயதுக்குட்பட்ட 13,682 குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தலா ரூ.3 லட்சம் வீதம் 410.46 கோடி ரூபாயையும் மற்றும் இலங்கைத் தமிழ் அகதிகளின் 9 குழந்தைகளுக்கு தலா ரூ.3 லட்சம் வீதம் ரூ.27 லட்சம் ரூபாயையும் கூடுதலாக ரூ.437.46 கோடி நிவாரணத் தொகை வழங்கினார்.

கொரோனா நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டு, பெற்றோர் இருவரையும் இழந்து உறவினர் அல்லது பாதுகாவலரின் அரவணைப்பில் வளர்ந்து வரும் 365 குழந்தைகளுக்கு மாத பராமரிப்புத் தொகையாக ரூ.3,000வீதம் ரூ.23 கோடியே 149 லட்சம் வழங்கியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் குழந்தைகளின் ஒட்டுமொத்த நல்வாழ்வினை மேம்படுத்தும் நோக்கில் "தமிழ்நாடு மாநில குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை 2021" வெளியிட்டுக் குழந்தைகள் நலனை பாதுகாப்பதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறார்.

விடியல் பேருந்து திட்டம்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முதலமைச்சராகப் பொறுப் பேற்றவுடன் ஆணை பிறப்பித்த 5 திட்டங்களில் ஒன்று விடியல் பயணத்திட்டம். பெண்கள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கையர்கள் ஆகியோர்க்கான கட்டணமில்லா விடியல் பயணம் திட்டத்தில் 6661.47 கோடி ரூபாய்ச் செலவில் மகளிரும் மாற்றுத் திறனாளிகளும் திருநங்கைகளும் ஏறத்தாழ 450 கோடி முறை பயணம் மேற்கொண்டு மாதம் ஏறத்தாழ 1,000 ரூபாய் வரை சேமிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். தெலுங்கானா உட்பட பல மாநிலங்களில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

காலை உணவு திட்டம்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்த காலை உணவுத் திட்டம், 30.992 பள்ளிகளில் 18.50 லட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.404.41 கோடியில் அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்படுகிறது. இந்த ஆண்டில் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படுகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மகளிர் உயர்கல்வி பெறுவதை ஊக்குவிக்கும் நோக்கில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி புதுமைப் பெண் திட்டத்தை ஆகஸ்ட் 2022 முதல் செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று தடையில்லாமல் உயர்கல்வியைத் தொடரும் பொருட்டு அனைத்து மாணவிகளுக்கும் மாதம் தோறும் ரூ.1,000 ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தில் இதுவரை 2.73 லட்சம் மாணவியர்க்கு 214.27 கோடி ரூபாய் மாதம் தோறும் அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

பணிபுரியும் மகளிர் விடுதிகள்

திருச்சி, கூடுவாஞ்சேரி மற்றும் தாம்பரம் ஆகிய மூன்று இடங்களில் 688 பணிபுரியும் மகளிர் பயன் பெறும் வகையில் ரூ31.07 கோடி செலவில் பணிபுரியும் மகளிர் விடுதிகள் தமிழ்நாடு கட்டப்பட்டு இவ்விடுதிகளில் 259 பணிபுரியும் மகளிர் பயனடைந்து வருகின்றனர்.

இரண்டாம் கட்டமாக ஓசூர், திருவண்ணாமலை மற்றும் பரங்கிமலை ஆகிய 3 இடங்களில் 432 பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் ரூ.35.87 கோடி செலவில் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் கட்டப்படுகின்றன.

சேலம், தஞ்சாவூர், பெரம்பலூர், வேலூர், விழுப்புரம், திருநெல்வேலி, அடையாறு (சென்னை) ஆகிய 7 இடங்களில் 476 படுக்கை வசதிகள் கொண்ட விடுதிகள் ரூ.4.21 கோடியில் புதுப்பிக்கப்பட்டு 13.7.2023 முதல் செயல்பட்டு வருகிறது.

17,312 சத்துணவு மையங்களுக்கு புதிய சமையல் உபகரணங்கள் ரூ.25.41 கோடியில் வழங்கப்படுகின்றன.

பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

ரூ.218.88 கோடி செலவில் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 87,501 குழந்தைகள் பயனடைந்தனர். 2021–22 ஆண்டில் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் 18 வயது நிரம்பிய 1,43,908 குழந்தைகளுக்கு ரூ.341.30 கோடி முதிர்வுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. தொட்டில் குழந்தைத் திட்டத்தின்கீழ் 446 குழந்தைகள் மீட்கப்பட்டுள்ளனர். 2021 முதல் டிசம்பர் 2023 வரை 7343 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருமண நிதியுதவி திட்டங்களின்கீழ், 3 ஆண்டுகளில் 1 லட்சத்து 26 ஆயிரத்து 637 மகளிர்க்கு 1047 கோடி ரூபாயை திருமண நிதியுதவியாக வழங்கியுள்ளார். இதில் 68,927 மகளிர்க்கு 8 கிராம் தங்க நாணயங்களுடன் நிதியுதவிகளும்; 57,710 மகளிர்க்கு நிதியுதவிகளும் வழங்கப்பட்டு மகத்தான சாதனை படைக்கப்பட்டுள்ளது.

திருநங்கைகளுக்குச் சொந்தமாகத் தொழில் தொடங்கிட மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ் மூன்றாண்டுகளில் ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 518 திருநங்கைகள் சுயதொழில் மானியம் பெற்று பயனடைந்துள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மகளிர் நலனில் தனிக் கவனம் செலுத்தி பல திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருவதால் மகளிர், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் என அனைவரும் பாதுகாப்புடன் வாழ்கின்றனர். முதலமைச்சரை மனமாரப் பாராட்டுகின்றனர்.

இவ்வாறு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

1 கோடி ரூபாய் மதிப்பிலான செல்லாத ரூ.500, ரூ.1,000 நோட்டுகள் பதுக்கி வைத்திருந்த நபர் கைது

சேலம், மே 24–

சேலத்தில் பண மதிப்பிழப்பின் போது செல்லாதவையாக அறிவிக்கப்பட்ட 500,1000 ரூபாய் நோட்டுகளை பதுக்கி வைத்திருந்த நபரை போலீசார் கைது செய்தனர். அந்த நபரிடமிருந்து 1 கோடி ரூபாய் மதிப்பிலான செல்லாத நோட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

சேலத்தைச் சேர்ந்த சபீர் பாலாஜி கோகுலநாதன் உள்ளிட்டோர் கூட்டாக சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்ததாக கூறப்படுகிறது. கடந்த 2016 ஆம் ஆண்டு பண மதிப்பிழப்பின்போது இவர்கள் வசம் சுமார் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு ஆயிரம் ரூபாய் 500 ரூபாய் நோட்டுகள் இருந்துள்ளன. இதனை தான் மாற்றிக் கொடுப்பதாக சபீர் தனது பங்குதாரர்களிடம் கூறி செல்லாத நோட்டுகளை வாங்கியதாக தெரிகிறது. ஆனால் ஆண்டுகள் பல கடந்தும் ரூபாய் நோட்டுகளை சபீர் மாற்றிக் கொடுக்கவில்லை.

இதனிடையே பணத்தை கொடுத்தவர்களில் பாலாஜி என்பவர் உயிரிழந்து விட்டார். பல ஆண்டுகளாகியும் பணத்தை திருப்பிக் கொடுக்காதது குறித்து சபீரிடம் கோகுலநாதன் கேட்டுள்ளார். அப்போது பணம் தன்னிடம் அப்படியே இருப்பதாகவும் இதனை மாற்றுவதற்காக முயற்சி செய்த வகையில் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்துள்ளதாகவும் அந்த பணத்தை கொடுத்துவிட்டு ரூபாய் நோட்டுக்களை எடுத்துச் செல்லுமாறும் கூறியதாக தெரிகிறது.

இதனால் ஆத்திரமடைந்த கோகுலநாதன் சபீர் மாசி நாயக்கன் பட்டியில் உள்ள அவரது வீட்டில் தடை செய்யப்பட்ட கஞ்சா உள்ளிட்ட பொருட்களை பதுக்கி வைத்திருப்பதாக அம்மாபேட்டை போலீஸ் ஸ்டேசனில் புகார் அளித்துள்ளார். இந்த புகாரின் பேரில் சோதனை மேற்கொண்ட போலீசார் சபீரின் வீட்டிலிருந்து ஒரு கோடி ரூபாய் செல்லாத 1000 ரூபாய் 500 ரூபாய் தாள்களை பறிமுதல் செய்தனர். தொடர்ந்து ரூபாய் நோட்டுக்களை பதுக்கி வைத்திருந்த சபீரரையும் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தனர்.

சவுக்கு சங்கரை குண்டர் சட்டத்தில் சிறையில் அடைத்ததை எதிர்த்து வழக்கு: 2 நீதிபதிகள் மாறுபட்ட கருத்து

சென்னை, மே 24–

சவுக்கு சங்கரை குண்டர் சட்டத்தில் சிறையில் அடைத்த உத்தரவை எதிர்த்த வழக்கில் மாறுபட்ட கருத்துக்கள் உள்ளதாக சென்னை ஐகோர்ட் நீதிபதிகள் அமர்வு தெரிவித்துள்ளது.

பெண் காவலர்களை அவதூறாக பேசியதாகக் கைது செய்யப்பட்ட யூ டியூபர் சவுக்கு சங்கரை, குண்டர் சட்டத்தில் சிறையில் அடைத்து, சென்னை மாநகர காவல் ஆணையர் கடந்த 12ஆம் தேதி உத்தரவு பிறப்பித்தார். இந்த உத்தரவை ரத்து செய்து தனது மகனை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் சவுக்கு சங்கரின் தாயார் கமலா சென்னைஐகோர்ட்டில் ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், எதிர்காலத்தில் எப்படி நடந்து கொள்வார் என உத்தரவாத மனு தாக்கல் செய்ய சவுக்கு சங்கர் தரப்புக்கு, நேற்று உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதிகள் சுவாமிநாதன் மற்றும் பாலாஜி அமர்வில், இன்று மீண்டும் விசாரணை வந்தபோது, சவுக்கு சங்கரின் தாய் தரப்பில், சவுக்கு சங்கர் கருத்தால் எந்த சட்டம் ஒழுங்கு பிரச்னையும் ஏற்படவில்லை. பொது சொத்துக்களுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை. குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கும் முன் நான்கு வழக்குகளில் கைது செய்யப்பட்டார். அந்த வழக்குகள், குண்டர் சட்ட உத்தரவில் குறிப்பிடவில்லை என வழக்கறிஞர் வாதிட்டார். தமிழக அரசுத்தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர், அனைத்து நடைமுறையும் பின்பற்றி தான் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைத்து உத்தரவிடப்பட்டுள்ளது. சவுக்கு சங்கர் பேச்சால் சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்பட்டுள்ளது என தெரிவித்தார். இந்த வழக்கில் தங்களையும் இணைக்க கோரி பத்திரிக்கையாளர் சந்தியா ரவிசங்கர் மற்றும் தமிழர் முன்னேற்ற படை தலைவர் வீரலட்சுமி ஆகியோர் தரப்பில் முறையிடப்பட்டது.

இடையீட்டு மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் மூத்த வழக்கறிஞர் பிரபாகரன் மற்றும் செல்வி ஜார்ஜ் ஆகியோர், பிளாக்மெயிலரான சவுக்கு சங்கரால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் தங்களுடைய மனுவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். மேலும், தொடர்ச்சியாக பத்திரிகையாளர்கள், காவல்துறையினர் மற்றும் நீதித்துறையினர் குறித்து அவதூறு கருத்துக்களை தெரிவித்து வருவதால், அவர் தண்டிக்கப்பட வேண்டிய நபர் என தெரிவித்தனர். இந்த வழக்கில் தமிழக அரசு பதில் மனு தாக்கல் செய்வதற்கு முன்னர் இறுதி விசாரணை நடத்துவது தொடர்பாக, தங்களுக்கிடையே மாறுபட்ட கருத்துக்கள் உள்ளதாகக் குறிப்பிட்ட நீதிபதி சுவாமிநாதன், இந்த மனு மீது இன்று பிற்பகல் உத்தரவு பிறப்பிக்கப்படும் என தெரிவித்தார்.

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர். காஞ்சிபுரம்.

க.கதிர்க்கையோன்,
த/பெ.பூங்காவனம். ...மனுதாரர்

மனுதாரர் தன் மகள் **க.தியா,** தாய் பெயர்: சௌந்தர்யா, தந்தை பெயர்: கதிர்க்கையோன் என்பவர் எண்.121, வன்னியர் தெரு, மாத்தூர் கிராமம், வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் என்கிற விலாசத்தில் **19.08.2021** தேதியன்று ஜனனி நர்சிங் ஹோம் காஞ்சிபுரத்தில் பிறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய தவறியதால் தற்போது மேற்படி பிறப்பினை பதிவு செய்து கொள்ளுமாறு எதிர்மனுதாரருக்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனுவின் பேரில் எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் தங்கள் ஆட்சேபணையை வரும் 15 நாட்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிலோ, அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

க.கதிர்க்கையோன்,
மனுதாரர்

ENROLLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within three months there after. I, KESAV PRASADH K, S/o.KOTHANDAPANI K, aged 23 years, residing at No.15A/23 Bajanai kovil Street, Thathankuppam, Villivakkam, Chennai--600049. intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council building, high court campus, Chennai-600104.

Those who have any valid objections may notify the same to the Bar Council with in ten days.

KESAV PRASADH K

*** *** ***

After 10 days of the publication of this notice and within three months there after. I, G.IYYANAR, S/O. GURUNATHAN, aged 31 years, permanently residing at No.427, Kadaisi Street, Vellanandhal Village, Rajapalayam Post, Kilpennathur Taluk, Tiruvannamalai District, Tamilnadu – 606755. intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council building, high court campus, Chennai-600104.

Those who have any valid objections may notify the same to the Bar Council with in ten days.

G.IYYANAR

IX ASST
IN THE CITY CIVIL COURT
AT CHENNAI
E.P No. 4199 of 2023
In
O.S.No. 9688 of 2021

S.A. Mohammed Ehsanullah.
9/5, Mottai Garden 10th Lane,
Washermanpet, Chennai-600021
...Decree Holder/ Plaintiff
// Vs //
A. Rishab
New No.175 Old No-88,
Broadway, Chennai - 600 108
...Judgment Debtor /Defendant
To
A. Rishab
New No.175 Old No-88,
Broadway, Chennai – 600 108

Please take notice that the Decree Holder Mr. S.A. Mohammed Ehsanullah, has initiated execution petition against you on the file IX Asst Judge, City Civil Court, Chennai. The Hon'ble Court was pleased to order notice to you for the hearing on 24.06.2024.

Kindly make yourself convenient to be present before the IX Asst Judge, City Civil Court, Chennai on 24.06.2024 at 10.30 a.m. without fail, failing which the matter will be decided in your absence.

L. DHAMODHARAN
Counsel for Decree Holder

நரேந்திரா புராபர்டீஸ் லிமிடெட்

[CIN: L70101TN1995PLC031532]
பதிவு அலுவலகம்: மக்கன்ஜி ஹவுஸ், 2வது தளம், புதிய எண்.49, பழைய எண்.25, பர்னபி சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010.

31 மார்ச் 2024–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தனியான நிதிநிலை முடிவுகள் அறிக்கை

பகுதி 1 ரூ. லட்சத்தில்

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு 31.03.2024 தணிக்கையானது	இன்றைய தேதி வரை 31.03.2024 தணிக்கையானது	முடிந்த காலாண்டு 31.03.2023 (மீண்டும் கூறப்பட்டது) தணிக்கையானது
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	384.647	1949.027	1123.502
2	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	(277.685)	299.736	634.219
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(277.685)	299.736	634.219
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(352.624)	224.646	572.296
5	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு முன்) உள்ளடக்கியது)	(352.624)	224.646	572.296
6	சமபங்கு மூலதனம் (ஒரு பங்கின் முகமதிப்பு ரூ.10/–)	710.640	710.640	710.640
7	ரிசர்வுகள் (மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக கடந்த ஆண்டு தணிக்கையான நிதி நிலை அறிக்கையில் உள்ளபடி)		3,029.682	2,876.100
8	ஒரு பங்கு சம்பாத்தியம் அடிப்படை & டைலூடட்(ஒவ்வொன்றும் ரூ.10/–) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) (காலாண்டு கணக்குகள் வருடாந்திரமல்ல)	(4.962)	3.161	8.053

குறிப்புகள்:
SEBI (பட்டியலிடுதல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சில் அதாவது பிஎஸ்இ லிமிடெட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு/ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் www.bseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளம் www.narendraproperties.com–ல் உள்ளது.

குழுவின் ஆணைப்படி
சிராக் N மஹர்
நிர்வாக இயக்குனர்

இடம் : சென்னை
தேதி : 23.05.2024

JMJ பின்டெக் லிமிடெட்

(முன்னர் மீனாட்சி எண்டர்பிரைசஸ் லிமிடெட்)
CIN : L51102TZ1982PLC029253
கடை எண். 3, 1வது தளம், ஆதி விநாயகா வளாகம், எண். 3, பேருந்து நிலையம், கோபால்சாமி கோயில் தெரு, கணபதி, கோயம்புத்தூர் வடக்கு, தமிழ்நாடு 641006
Email: investor@jmjfintechltd.com | Website: www.jmjfintechltd.com | Ph. No. : 7395922291/92

31.03.2024 முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் சுருக்கம்

ரூ. லட்சத்தில்

விவரங்கள்	முடிந்த காலாண்டு 31.03.2024 (குறிப்பை பார்க்கவும்)	முடிந்த காலாண்டு 31.12.2023 (தணிக்கை செய்யாதது)	முடிந்த காலாண்டு 31.03.2023 (தணிக்கை யானது)	முடிந்த ஆண்டு 31.03.2024 (தணிக்கை யானது)	முடிந்த ஆண்டு 31.03.2023 (தணிக்கை யானது)
செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்)	306.55	214.18	77.89	746.75	382.29
காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	164.25	124.63	31.56	385.76	98.37
காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன் மற்றும் விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	164.25	124.63	31.56	385.76	98.37
காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின் மற்றும் விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	46.22	102.57	16.30	213.78	83.11
நடப்பு காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/நஷ்டம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) ஆகியவற்றை உள்ளடக்கியது	46.22	102.57	16.30	213.78	83.11
சமபங்கு மூலதனம்	1240.00	1240.00	1240.00	1240.00	1240.00
தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கான பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) (ஒவ்வொன்றும் ரூ.10/–)	0.00	0.00	0.00	0.00	0.00
அடிப்படை மற்றும் டைலூடட்	0.37	0.83	0.13	1.72	0.67

குறிப்பு:

1. இந்திய கணக்கியல் தரநிலை ('Ind AS') மற்றும் நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவு 133 மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள் 2015 மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வழங்கிய சுற்றறிக்கைகள், விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள், திருத்தப்பட்ட செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள், 2015–ன் விதி 33 மற்றும் விதி 52 மற்றும் விதி 63(2) மற்றும் இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் நடைமுறைகள் ஆகியவற்றுக்கு இணங்க நிறுவனத்தின் தனியான நிதிநிலை முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன
2. மேற்கண்ட முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, 23, மே 2024 அன்று நடைபெற்ற குழு கூட்டத்தில் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
3. 31.3.2024 முடிந்த ஆண்டுக்கான தணியான நிதிநிலை முடிவுகளை சட்டதணிக்கையாளர்கள் தணிக்கை செய்கை செய்தனர்.
4. நடப்பு மற்றும் முந்தைய நிதியாண்டின் நான்காவது காலாண்டின் புள்ளிவிவரங்கள், முழு நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட புள்ளிவிவரங்களுக்கும், நடப்பு மற்றும் முந்தைய நிதியாண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதி வரை வெளியிடப்பட்ட ஆண்டு முதல் தேதி வரையிலான புள்ளிவிவரங்களுக்கும் இடையிலான சமநிலை முடிவுகள் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களின் குறுகிய பரிசீலனைக்குட்பட்டதாகும்.
5. 5. ரிசர்வ் வங்கியின் முதன்மை வழிகாட்டுதல் DNBR.PD.002/03.10.119/2016-17 – NBFC பொது வைப்புத்தொகையை ஏற்றுக்கொள்ளுதலின்படி பெறப்பட்ட துணைக் கடன்கள் பற்றிய அறிக்கை
6. நிறுவனம் ஒரு வணிகப் பிரிவில் மட்டுமே செயல்படுகிறது. Ind As 108 இயக்கப் பிரிவுகளின்படி தனித்தனியாக அறிவிக்கக்கூடிய பிரிவுகள் எதுவும் இல்லை.
7. முந்தைய காலங்கள்/ஆண்டுக்கான புள்ளிவிவரங்கள், நடப்பு காலத்திற்கிணங்க தேவையான இடங்களில் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன/ மறுசீரமைக்கப்பட்டுள்ளன. அறிக்கையின் கீழ் காலாண்டில் குறிப்பிடத்தக்க மறுசீரமைப்பு / மறுவகைப்படுத்தல் எதுவும் இல்லை.

குழுவின் ஆணைப்படி
JMJ பின்டெக் லிமிடெட்டுக்காக
நிர்வாக இயக்குனர்

இடம்: கோயம்புத்தூர்
தேதி: 23.05.2024

ஈசாப் இந்தியா லிமிடெட்

ESAB®
CIN:L29299TN1987PLC058738
பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.
தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

ரூ. லட்சங்களில் (EPS தவிர)

வ.எண்	விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு மார்ச் 31 2024 [தணிக்கை செய்யப்பட்டது]	முடிவடைந்த காலாண்டு டிசம்பர் 31 2023 [தணிக்கை செய்யப்படாதது]	முடிவடைந்த காலாண்டு மார்ச் 31 2023 [தணிக்கை செய்யப்பட்டது]	முடிவடைந்த ஆண்டு மார்ச் 31 2024 [தணிக்கை செய்யப்பட்டது]	முடிவடைந்த ஆண்டு மார்ச் 31 2023 [தணிக்கை செய்யப்பட்டது]
1	மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம்	34,226	30,249	30,469	1,24,981	1,09,860
2.	இக்காலத்திற்கான நிகர லாபம் (வரிக்கு முன், சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்)	5,992	5,111	5,645	21,996	18,229
3	இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	5,992	5,111	5,645	21,996	18,229
4	இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	4,425	3,795	4,186	16,298	13,568
5	இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)]	4,405	3,795	4,230	16,278	13,612
6	சமபங்கு மூலதனம்	1,539	1,539	1,539	1,539	1,539
7	பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்)					
	அ) அடிப்படை	28.75	24.66	27.20	105.90	88.16
	ஆ) குறைமதிப்பு	28.75	24.66	27.20	105.90	88.16

குறிப்பு : மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மார்ச் 31,2024-ன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டு மற்றும் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் www.esabindia.com என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின் BSE Limited மற்றும் NSE India Limited என்ற இணையதளத்திலும் காணலாம்.

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக
ரோஹித் கம்பீர்
மேலாண்மை இயக்குனர்

சென்னை
மே 23, 2024

"Shaping the world we imagine"
Visit our website : https://www.esabindia.com

CCAL

கெம்பேப் ஆல்கலீஸ் லிமிடெட்

CIN No. L24290TN2009PLC071563
பதிவு அலுவலகம்: டீம் ஹவுஸ், ஜிஎஸ்டி சாலை, வண்டலூர், சென்னை 600 048.
Website: www.chemfabalkalis.com Email: ccalcosecy@ccal.in Phone No: +91 44 22750323 Fax No: +9144 22750860

31.03.2024ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் அறிக்கை சுருக்கம்

(ரூ.லட்சத்தில்)

வ எண்	விவரங்கள்	தனியானது: முடிந்த 3 மாதங்கள் 31/03/2024	தனியானது: முடிந்த நடப்பு ஆண்டு 31/03/2024	தனியானது: கடந்தாண்டில் முடிந்த இதே 3 மாதங்கள் 31/03/2023	ஒருங்கிணைந்தது: முடிந்த 3 மாதங்கள் 31/03/2024	ஒருங்கிணைந்தது: முடிந்த நடப்பு ஆண்டு 31/03/2024	ஒருங்கிணைந்தது: கடந்தாண்டில் முடிந்த இதே 3 மாதங்கள் 31/03/2023
1.	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	8,229.85	32,728.78	7,329.64	8,230.75	32,729.68	7,329.64
2.	காலத்திற்கான நிகர லாபம் (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	904.79	4,262.68	2,108.38	795.80	3,914.65	2,052.18
3.	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	904.79	4,262.68	2,108.38	795.80	3,914.65	2,052.18
4.	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	655.91	2,998.72	1,584.15	540.70	2,632.31	1,526.12
5.	காலத்திற்கான மொத்த ஒருங்கிணைந்த வருமானம் (காலத்திற்கான லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர ஒருங்கிணைந்த வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	721.94	3,020.66	1,481.65	606.73	2,654.25	1,423.61
6.	சமபங்கு மூலதனம்	1,422.66	1,422.66	1,418.20	1,422.66	1,422.66	1,418.20
7.	நடப்பு ஆண்டு தணிக்கையான இருப்பு நிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள இதர ஈக்விட்டி		37866.33			37303.82	
8.	பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (பங்கு ஒன்றின் முகமதிப்பு ரூ.10)						
	1. அடிப்படை (ரூ.)	4.61	21.10	11.18	3.80	18.53	10.77
	2. டைலூட்டட் (ரூ.)	4.56	20.90	11.07	3.76	18.34	10.66

குறிப்புகள்:
செபி (பட்டியல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015, கட்டுப்பாடு 33–ன் கீழ் பிஎஸ்இ மற்றும் என்எஸ்இ–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள தனியான மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. தணிக்கை செய்யப்பட்ட தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் பிஎஸ்இ இணையதளம் (www.bseindia.com) மற்றும் என்எஸ்இ இணையதளம் (www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.chemfabalkalis.com)–ல் உள்ளது.

கெம்பேப் ஆல்கலீஸ் லிமிடெட்டுக்காக
சுரேஷ் கிருஷ்ணமூர்த்தி ராவ்
சேர்மன்
Din No : 00127809

இடம்: சென்னை
தேதி: 22 மே 2024